மொழிபெயர்ப்புகள் & ஆய்வு நூல் வரிசை 7

கலீல் ஜிப்ரானின்

பாடல்கள் 14

தமிழாக்கம்

முனைவர் செ. இராஜேஸ்வரி



சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை

மொழிபெயர்ப்புகள் & ஆய்வு நூல் வரிசை 7

கலீல் ஜிப்ரானின்

பாடல்கள் 14

தமிழாக்கம்

முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை

நூல் விவரம்


நூலின் பெயர்	:	பாடல்கள் 14 (கலீல் ஜிப்ரான்)
துறை	:	கவிதை மொழிபெயர்ப்பு
மொழிபெயர்ப்பாளர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/422, திருவள்ளுவர் தெரு தினமணி நகர், மதுரை-625 018
பதிப்பு	:	டிசம்பர், 2021
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	82
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	Paadalkal 14 (Kahlil Gibran)
Subject	:	Translation (Poems)
Translator	:	Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Designer	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam 3/422, Thiruvalluvar Street Dinamani Nagar, Madurai–625 018
Publish	:	December, 2021
Pages	:	82
Price	:	Rs.200/-

அன்புக் காணிக்கை





கலீல் ஜிப்ரான்

1883 - 1931

லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்.
கவிஞர், ஓவியர், தத்துவ ஞானி

◇◇◇◇◇◇◇◇◇

என்னுரை

மொழிபெயர்ப்பாளர்
முனைவர் செ. இராஜேஸ்வரி

கலீல் ஜிப்ரான் படைப்புகளை நான் 1990 முதல் வாசித்தும் மொழிபெயர்த்தும் வருகிறேன். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் புதன் வட்டத்தில் வாசித்திருக்கிறேன். என் மனம் கவர்ந்த படைப்புகள் என்பதால் அவ்வப்போது ஒவ்வொரு பகுதியை மொழிபெயர்த்து வாசித்து இன்புறுவது ஒரு பழக்கமாக இருந்துவந்தது. திடீரென்று இவற்றை அச்சிட்டால் என்ன என்ற எண்ணம் வந்த போது இன்னும் ஒரு முறை வாசித்து நண்பர்களிடம் அனுப்பி வாசிக்கச் சொல்லி அவர்களின் ஏற்பையும் பாராட்டையும் பெற்ற பிறகு அச்சில் கொண்டு வந்தேன்.

The Earl of Rascommon எழுதிய An essay on translated Verse [1684]இல் கவிதைகளை மொழிபெயர்ப்பது குறித்து ஒரு கவிதை காணப்படுகிறது. அதில் மொழிபெயர்ப்பாளர் பேரார்வத்துடன் தக்க கவிஞரைத் தேடி, நல்ல படைப்புகளைத் தேடி அவற்றுடன் ஆத்மார்த்தமாக ஒன்றிப் போய் நெருக்கமாகி மொழிபெயர்ப்பாளராக விலகி நிற்காமல் படைப்பாளியாகவே மாறி எண்ணம், சொல், மொழிநடை, ஆத்மா என்று அனைத்திலும் மூல நூற்கவிஞராகவே ஆகிவிடுகிறார்.

அவரே சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்கிறார். இது ஏறத்தாழ கூடு விட்டுக் கூடு பாயும் நிலை ஆகும்.

Examine how your humour is inclined
And which the Ruling passion of your mind
Then seek a poet who your way does bend
And chuse an author as you chuse your friend
united by this sympathetic bond
You grow familiar intimate and fond
Your thoughts, your words, your styles, your souls agree
No longer his interpreter, but He'
Vrbal translation sticks to bare text
Sometimes so close the reader is perplext
Finding the words to find the wit that spring
From the first writer in his native tongue

மூல நூல் படைப்பை ரசித்து அனுபவித்தவர் மட்டுமே இவ்வாறு மொழிபெயர்க்க ஆசைப்படுவார். அவரது ஆசையை அவரது இலக்கு மொழியும் நிறைவேற்றத் துடிக்கும். 'the poet translator is extending his own voice writing his finest work performing a transmission of civilisation in the process of extending his own voice' என்ற வரிகள் மொழிபெயர்ப்பு மூலமாக நாகரிகங்களும் கலாச்சாரமும் பரிமாறப்படும்போது மொழிபெயர்ப்பாளரின் பொறுப்பும் கடமையும் ஆத்மார்த்தமான ஒப்படைப்பும் அதிகமாகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆக, கவிதைகளை

மொழிபெயர்க்கும் ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரும் இத்தகைய பெருங்கடமை உணர்ச்சியுடன் ஆத்மார்த்தமாக இப்பணியில் ஈடுபடுகின்றனர், என்பதை எவரும் மறந்து விடலாகாது.

ஆசை பற்றி அறையலுற்றேன் என்றொரு பெரும்புலவர் கூறியது போல மொழிபெயர்ப்பின் மீது கொண்ட தீராத ஆசை வாசித்து இன்பம் அடைவதனைத்தையும் மொழிபெயர்க்க வேண்டும் என்ற பேரவாவின் உந்துதலால் இம்மொழிபெயர்ப்பும் உருவாகியுள்ளது.

கலீல் ஜிப்ரானின் மணலும் நுரையும் முதலில் வந்தது. வாசகங்களாக வாக்கியங்களாகக் காட்சியளிக்கும் தத்துவ முத்துக்களை புதுக் கவிதை வடிவில் கொட்டிக் கிடக்கும் கண்ணாடி வளையல் துண்டுகள் போல உருமாற்றித் தந்தேன் .அதைத் தொடர்ந்து அவரது Tears and Laughter என்ற நூலில் இருந்து பாடல்களை மட்டும் எடுத்து மொழிபெயர்த்தேன். அவை பாடல்கள் பதினான்கு என்ற இந் நூல் வடிவைப் பெற்றது. இதே நூல் ‘கண்ணீரும் புன்னகையும்’ என்ற பெயரில் மொழிபெயர்ப்பு நூலாக வெளிவந்த போது அதனை என் மொழிபெயர்ப்பியல் ஆய்வுக்குப் பயன்படுத்தினேன். அப்போது முதல் Tears and Laughter என்ற இந்நூல் எனக்குப் பழக்கமானது; மனதுக்கு நெருக்கமானது. ஆனால் நான் மொழிபெயர்க்கத் தொடங்கிய பிறகு கண்ணீரும் புன்னகையும் என்ற நூலைப் பார்க்கவில்லை.

பாடல்களை மட்டும் மொழிபெயர்ப்பது என்று முடிவாகி மொழிபெயர்க்கத் தொடங்கியதும் அவை

நீண்ட வாக்கியங்களாக வருவதைப் பார்த்தேன். ஆனால் ஓட்டம் சீராக இருந்தது. அதனை நான் கெடுக்க விரும்பவில்லை. கவிதையா? உரை வீச்சா? வெறும் வாக்கியங்களா? என்று முடிவு செய்ய முடியாதபடி தான் கலீல் ஜிப்ரானும் இதனைப் படைத்திருந்தார். அதனை அப்படியே ஓட்டம் தப்பாமல் கருத்துச் சிதையாமல் தமிழில் கொடுக்க முனைந்தேன். அவரது third eye concept கவிதைக்கு வலிமை சேர்க்கிறது. அவரது உலகப் பார்வை உன்னதமானது. அழியும் பொருட்களுக்கு பின்னால் விரட்டிக் கொண்டு ஓடாத மனோபாவம் கொண்டது. நிலையான சந்தோஷங்களுக்குக் கட்டியம் கூறுவதாகும். இறப்பின் எழில் கூட வடிவான வனப்பான கவிதையாகி உள்ளது. இறப்பும் இறுதிப் பயணமும் எத்தகைய அழகும் மகிழ்ச்சியும் கொண்டது என்று கலீல் ஜிப்ரான் பாடும்போது ‘செத்து செத்து விளையாடுவோமோ’ என்று முத்துக்காளை திரைப்படத்தில் கேட்ட நகைசுவை வசனம் நம் மனத்தில் உண்மையாகவே அழகாக ஒலிக்கிறது.

மனிதனின் பாடல், காதலின் பாடல், ஆத்மாவின் பாடல், கடலின் பாடல் என்று பல கோணத்தில் வாழ்க்கையைப் பாடலாக்கி வடிவாகவும் வனப்பாகவும் அளிக்கிறார் கலீல் ஜிப்ரான். இத்தகைய இனிய பாடல்களை மொழிபெயர்ப்பதில் சந்தம், கவிநயம், வடிவம் என்று எதையுமே நான் அளவீடுகளாக நான் கொள்ளவில்லை. ஒரு வாசகனாக ரசித்து மகிழ்ந்த என் அனுபவத்தை என் தாய் மொழி வாசகருடன்

பகிர்ந்து கொண்டேன். வாசிப்பும் ரசனையுமே மொழிபெயர்ப்பின் முதல் தேவைகள் ஆகும். அடுத்த தேவை என்பது தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கருதும் பரந்த மனப்பான்மை. இவ்விரண்டின் அடிப்படையில் பாடல்கள் பதினான்கு உங்கள் கைகளில் தவழ்கிறது.

கலீல் ஜிப்ரானுக்குக் கிடைத்த அனுபவம் அவரை இத்தகைய கவிதைகளை எழுதத் தூண்டியது. இக்கவிதைகள் தென்றல் காற்றின் மேன்மையுடன் தெளிவான வாழ்வியல் சிந்தனைகளை ஆழமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றன. மனம் சோர்வுற்ற நிலையிலும் குதூகலிக்கும் நிலையிலும் இப்பாடல்களைப் படிக்கலாம். இசை ஞானம் உடையவர் பாடி மகிழலாம். சந்தம் தாளம் போன்றன இல்லையென்றாலும் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதால் தேர்ந்த இசைஞனுக்கு இவற்றை இசைப்பாடல்களாகப் பாட முடியும்.

வாசிப்பின் சுவையும் வார்த்தைகளின் அழகையும் ஆங்கிலத்தில் இருப்பதை போலத் தமிழில் தருவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தேன். தற்போது அனைவரது கையிலும் திறன் பேசிகள் இருப்பதால் சந்தேகம் வந்தவிடத்து கூகுள் தேடு பொறியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருப்பதால் நிறைய அடிக்குறிப்புகள் தரவில்லை. மொழிபெயர்ப்பாளருடன் வாசகரின் பங்கும் இணையும் போது அறிவனுபவம் பன்மடங்காகிறது. வாசகர் வாசித்து இன்புறுக!

செ. இராஜேஸ்வரி

◇◇◇◇◇◇◇◇◇

நூலாசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி



முனைவர் **செ. இராஜேஸ்வரி** மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர்தமிழ், ஓங்குதமிழ், நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் இவருடைய ஆய்வு கட்டுரைகள் வெளிவந்தன. **மொழி பெயர்ப்பியல் ஆய்வு** என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைக்கழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate Editor] பணியாற்றினார். ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது.

ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறைதிரு இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி *ஸ்ரீ*மத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க **Easy English** என்ற ஆங்கிலப்

பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன். காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www. tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தற்போது வெற்றித் திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் இருபத்தோர் நூல்கள் வெளிவந்துள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ்விரும்பி அவர்களின் எட்டுக் கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகமும், ஆஸ்திரேலியாவின் மூன்ஸ்டோன் பதிப்பகமும் வெளியிட்டுள்ளன.

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ்விரும்பி அவர்களின் நூல்களின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றை நான்கு **கவிதை திறனாய்வு நூல்களாக** வெளியிட்டார்.

சமூக பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மேனாள் தலைவர் பேரா. முனைவர் ஞானசேகரனின் ஐந்து நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவற்றில் முதல் மூன்று நூல்களை மூன்ஸ்டோன் பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு மற்றும் ஆய்வு நூல் வரிசையில் இவர் ஐந்து நூல்களை எழுதியுள்ளார். முதல் நூலை நெருஞ்சி இலக்கிய இயக்கமும் மற்ற நூல்களை சந்திரோதயம் பதிப்பகமும் வெளியிட்டது.

இவர் **Love Thamizh** என பன்மொழி மின்னிதழின் ஆசிரியர். இவ்விதழில் தமிழ் மொழி, வரலாறு, பண்பாடு குறித்த ஆங்கிலக் கட்டுரைகளை வெளியிடுகிறார். தமிழ் மற்றும் பிற மொழிகளுக்கு இடையில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளை இந்திய மற்றும் ஐரோப்பிய மொழிகளில் வெளியிடுகிறார்.

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய சிறுகதைகள் ‘அமராவதியின் காதல்’ என்ற பெயரில் தொகுக்கப்பட்டு வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **"என்னோட ராசி நல்ல ராசி"** என்ற தொடர் வாரந்தோறும் **தினகரன் (ஆன்மீக மலர்)** நாளிதழில் வருகிறது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் (தினகரன் வெளியீடு) இவரது கட்டுரைகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1-21. வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 21 நூல்கள்.

22. சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்

மொழிபெயர்ப்பு

ஆங்கிலம் ⟶ தமிழ்

23. Indian Women-Changes and Challenges (இந்திய பெண்கள் - சாதனைகளும் சவால்களும்)

24. The Globalisation : An Urban Theology (உலகமயமாக்குதலும் நகரிய இறையியலும்)

25. Water Privatisation (for PET, Madurai) (தண்ணீர் தனியார் மயமாக்கல்)

26. Assisted reproductive technologies and its Impact on Women (SIRD, Madurai)

27. Eco Vision and Mission

28. Bachelor's Study Materials for Social Science [IGNOU, Madurai]

* Foreign News Kamalam Info

* News, P. Gurus.com

* Articles on Eye Care, Aravind Eye Hospital, Madurai

தமிழ் ⟶ ஆங்கிலம்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள்

29. Shade of the Flowering Tree

30. Songs of Dryness

31. Speaking with You
32. Therapist of the Finest Art
33. Language of Love
34. A Lady at the little gate
35. Honey Hive
36. Ambrosial Kiss (Editor)
37. Following Dusty Feet (in print)

பேரா. முனைவர் ஞானசேகரனின் நூல்கள்

38. Emerging Mallarism
39. Festival of lord Indra
40. Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam)
41. Re-reading of Pallu literature
42. Mallariyan Literature
43. Frontyard without My Dad (Poem)

மொழிப் பாடநூல்

44. Easy English
45. Tamil for Non-Tamils

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

46. பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு
47. பெண் தெய்வ வழிபாடு
48. தேவேந்திரன்
49. மருதநிலப் பெண் தெய்வங்கள்
50. இருநிலத்தில் திருமுருகன்
51. முன்னோர் வழிபாடு
52. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்
53. யானைக் கடவுள்

கவிதைத் திறனாய்வு நூல்கள்

54. பாடுபொருளும் பாசப்பொருளும்
55. பூ மர நிழலின் களமும் காலமும்
56. "2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு
57. கவிதையில் காதல்

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள்

58. மொழிபெயர்ப்பியல் ஆய்வு
59. கவிதை மொழிபெயர்ப்பு
60. நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)

ஆங்கிலக் கவிதை மொழி பெயர்ப்பு

61. எட்டுத்திக்கும் செல்வீர்
62. அவன் கடவுளுக்கு நிகரானவன்
63. செக்கச் சிவந்த ரோஜா
64. கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"
65. கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் **14**"

சிறுகதைத் தொகுதி

66. அமராவதியின் காதல்

◇◇◇◇◇◇◇◇◇

உள்ளடக்கம்

1. கடலலையின் கானம்

உறுதியான கடற்கரைதான் என் காதலன்
நானும் அவனும்,
கடைசியில்,
நாங்கள் காதலால் இணைந்தோம்.
வானிலவு என்னை அவனிடமிருந்து
இழுக்கிறது
நான் வேகமாக அவனிடம் ஓடிப்போய்
பின்பு
பிரிய மனமில்லாமல்,
சின்னஞ்சிறிய விடை பெறுதலோடு
அங்கிருந்து கிளம்புகிறேன்

தங்க நிறத் தரையில் தவழும்
என் நுரைகளுக்கு வெள்ளி முலாம் பூச
நீல அடிவானத்தின் பின்பக்கத்தில் இருந்து
வண்ணத்தை விரைந்து திருடுகிறேன்
நாங்கள் விவேகத்தில் உருகிப் பிணைகிறோம்

நான் அவன் தாகத்தைத் தணித்து
அவன் இதயத்துள் மூழ்குகிறேன்

அவன் என் குரலை மென்மையாக்கி
என் கோபத்தைத் தணிக்கிறான்
விடியலில் காதலின் விதிகளை
அவன் காதுக்குள் ஓதுவேன்
அவன் ஏக்கத்தோடு என்னைத் தழுவுவான்.
மாலையில்,
நம்பிக்கையின் கீதத்தை
நான் இசைப்பேன்
பிறகு அவன் முகத்தில்
மென் முத்தங்களைப் பதிப்பேன்
நான் பரபரப்பும் அச்சுறுத்தலும் கொண்டவள்,
சிந்தனா சக்தியும் கொண்டவன்.
அவனது பரந்த மார்பு
என் படபடப்பை சாந்தப்படுத்தும்.

அலை வரும்போது
நாங்கள் ஒருவரை ஒருவர்
வருடி மகிழ்வோம்.
அது உள்ளே திரும்பிச் சென்றதும்
அவன் பாதங்களில்
என் வேண்டுதலை சமர்ப்பிப்பேன்

கடற் கன்னியர் ஆழத்திலிருந்து மேலெழும்பி
விண்மீன்களை ரசிக்க
என் மணல் மேடுகளின் மீது அமர்ந்து

ஓய்வெடுத்த போது
அவர்களைச் சுற்றிச் சுற்றிப்
பல முறை நடனமாடினேன்
காதலர்கள் அற்ப விஷயங்களுக்காக
தங்களுக்குள்
குறைபட்டுக் கொள்வதைக் கேட்டேன்
அவர்களுக்குப் பெருமூச்சு தந்து உதவினேன்

பல முறை பெரும்பாறைகளைக் கேலி செய்து
புன்னகையோடு போய் அணைத்தேன்
ஆனால்,
அவை ஒருபோதும்,
என்னைக் கண்டு சிரித்ததில்லை.
பல முறை மூழ்கிய ஆத்துமாக்களை
நான் மேலே எடுத்து வந்து
மென்மையாகத் தூக்கிச் சென்று
என் கடற்கரை காதலனிடம்
கொண்டு சேர்த்தேன்
அவன் அவர்களுக்கு சக்தி அளிக்கிறான்
என் சக்தியை என்னில் இருந்து எடுக்கிறான்.

பலமுறை
ஆழ்கடலில் இருந்து
ரத்தினங்களை அள்ளி வந்து
என் ஆசைக் காதலனுக்குக்

காதல் பரிசாக்கினேன்
அவன் அதை மௌனமாய்ப் பெற்றுக்கொண்டான்.
அவன் என்னை எப்போதும் வரவேற்பதால்
அவனுக்கு நான் அள்ளி அள்ளி வழங்குகிறேன்.

இரவின் கனத்தில்,
எல்லோரும் தூக்கப்பிசாசைத் தேடும்போது
நான் எழுந்து உட்கார்ந்து,
ஒரு நேரம் அழுவேன்
மறுநேரம் பெருமூச்சு விடுவேன்
ஆனால், எப்போதும் விழித்திருப்பேன்.
தூக்கமின்மை என்னை பலவீனப் படுத்தியது
ஆனால்
நான் ஒரு காதலி
காதலின் உண்மை உறுதியானது
நான் பலவீனம் அடையலாம்
ஆனால் ஒருபோதும் மரணிப்பதில்லை.

2. மழையின் பாடல்

கடவுளரால்
வானத்திலிருந்து கீழே இறங்கும்
புள்ளிக் கோலமிட்ட வெள்ளி நூல் - நான்.
இயற்கை என்னை ஏற்றுக் கொண்டு
வயல்களையும் சமவெளியையும்
அலங்கரிக்கிறது

இஷ்த்டாரின் மகுடத்திலிருந்து
அவன் மகன் "விடியல்" என்போன்
தன் தோட்டத்தை அலங்கரிக்க
பறித்துக் கொண்டு வந்த
அழகு நித்திலங்கள் நான்

நான் அழுதால் மலைகள் சிரிக்கும்
நான் அடங்கினால் மலர்கள் மகிழும்
நான் வணங்கினால், எல்லாமே சிறக்கும்

மேகமும் வயலும் காதலர்கள்
அவர்களுக்கிடையே

நான் இரக்கத்தின் தூதுவன்
ஒன்றின் தாகத்தைத் தணிக்கிறேன்
மற்றொன்றின் காலத்தை ஆற்றுகிறேன்

என் வருகையை இடி பறை சாற்றுகிறது
என் விலகலை வானம் தெரிவிக்கிறது
பைத்தியக்காரத்தனத்தின் பாதத்திலிருந்து தொடங்கி
மரணத்தின் விரிந்த சிறகுகளுக்குள் முடிகின்ற
பூலோக வாழ்வைப் போன்றவன் நான்

கடலின் உள்ளத்திலிருந்து உதித்து
தென்றலோடு உயர உயரப் பறக்கிறேன்
தேவையின்போது,
வயலைப் பார்த்தால்
கீழே இறங்கி
நூறாயிரம் முறை
கொஞ்சம் கொஞ்சமாக
மலர்களையும் மரங்களையும்
தழுவுவேன்.

பிஞ்சு விரல்களால்
ஜன்னலைச் செல்லமாய்த் தட்டுவேன்
என் அறிவிப்பு ஒரு வரவேற்புப் பாடல்
அது எல்லோருக்கும் கேட்கும்
ஆனால் ஒரு சிலரால் மட்டும் உணர முடியும்.

ஆணிடமிருந்து சக்தியை எடுத்து
அவனையே ஆட்டிப் படைக்கும்
பெண்ணைப் போல்
காற்றின் வெப்பம் என்னைப் பிறப்பிக்கும்
ஆனால் பதிலுக்கு
நான் அதைக் கொன்று விடுவேன்.

நான்
கடலின் பெருமூச்சு
வயலின் சிரிப்பு
வானத்தின் கண்ணீர்
அதனால்
பாசக்கடலின் ஆழத்திலிருந்து
காதலுடன் வரும் பெருமூச்சு
வானத்தின் வண்ண வயலிலிருந்து
துள்ளி வரும் சிரிப்பு
நினைவுகளின் எல்லையற்ற
ஆகாயத்திலிருந்து சிந்தும் கண்ணீர்.

3. ஆத்ம கீதம்

இது அன்பின் கீதம்
காயினு*ம் ஈசா*வும் கூட பாடலாம்
இப்பாடல்
மல்லிகையை விட மணமிக்கது
எந்தக் குரலால்
இப்பாடலை அடிமைப்படுத்த முடியும்?

கன்னியின் மர்மத்தைப் போல
இதயத்தைக் கட்டிப் போடும்
எந்த நரம்பால்*
அதனைத் தட்டி எழுப்ப இயலும்?

கடலின் இரைச்சலையும்
இரவுப் பறவையின் இன்னிசையையும்
யாரால் துணிந்து இசைக்க முடியும்?

சூறாவளிக் காற்றின் ஓசையையும்
குழந்தையின் விசும்பலையும்
யாரால் துணிந்து ஒப்பிட முடியும்?

இதயம் பேசவேண்டிய சொற்களை
யாரால் உரத்தகுரலில் பேச முடியும்

தெய்வகீதத்தை
யாரால் வாய்திறந்து பாட முடியும்?

---

* நரம்பு - இசைக்கருவியில் உள்ள நாண்/நரம்பு
* காயின் - ஆதாமின் மகன் விவசாயி
* ஈசா - இயேசு கிறிஸ்துவை ஈசா நபி என்பர்

4. பூமலரின் இசைப்பா

இயற்கையின் குரலால்
திரும்பத் திரும்பச் சொல்லப் படும்
அன்புச் சொல் - நான்
நீல நிறக் கூடாரத்திலிருந்து
பச்சைக் கம்பளத்தின் மீது
விழுந்த நட்சத்திரம் நான்

மழைக்காலத்தைக் கொண்டு
வசந்தக் காலத்தை கருவுயிர்த்த
மூலகங்களின் செல்ல மகள் - நான்

கோடைப் பருவத்தின்
மடியில் வளர்ந்து
இலையுதிர் பருவத்தின்
கட்டிலில் துயின்றவள் நான்

விடியலின் ஒளியின் வருகையை அறிவிக்க
இளங்காற்றுடன் இணைவேன்
மாலை வெளிச்சத்துக்கு விடையளிக்க
பறவைகளுடன் சேர்வேன்

எனது பற்பல வண்ணங்களால்
சமவெளிகள் அலங்கரிக்கப் படுகின்றன

காற்று என் வாசனையால்
நறுமணம் ஊட்டப்படுகிறது

நான் தூக்கத்தைத் தழுவுகையில்
இரவின் வழிகள் என்னைக் காத்து நிற்கும்
நான் விழிக்கும் போது,
பகலின் ஒரே விழியான
கதிரவனை நோக்குவேன்.

பனித் துளியை மதுவாய் பருகினேன்
பறவையின் இசையைக் கேட்டு
புல்லின் அசைவுக்கேற்ப ஆடுவேன்.

காதலர்களின் அன்பளிப்பு நான்
மணமக்களின் நெற்றிப்பட்டம் நான்
மகிழ்ச்சிப் பொழுதின் நினைவு நான்
மரணத்தின் கடைசிப் பரிசு நான்
இன்பத்தில் பங்கெடுப்பதும் நான்,
துன்பத்தில் பங்கெடுப்பதும் நான்.

ஆனால்,
நான் ஒளியை மட்டுமே பார்க்க
உயரே நோக்குவேன்
ஒருபோதும் நிழலைப் பார்க்க
கீழே நோக்கியதில்லை
இது தான் ஞானம்
இதனை
மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும்.

5. காதல் கீதம்

நான்
காதலரின் கண்கள்
ஆவியின் மதுரசம்
இதயத்தின் ஊட்டச்சத்து

நான் ஒரு ரோஜா
என் இதயம் விடியலில் திறக்கிறது
இளம் கன்னி முத்தமிட
என்னைத் தன் மார்பின் மீது வைக்கிறாள்

உண்மையான அதிஷ்டத்தின் உறைவிடம் நான்
இன்ப சுகத்தின் மூல ஸ்தானம் நான்
அமைதி மற்றும் சமாதானத்தின் ஆரம்பம் நான்
அழகின் இதழ்களில் பூக்கும் புன்னகை நான்

இளைஞன் என்னை வெல்லும் போது
அவனது பாடுகளை மறந்து
மொத்த வாழ்க்கையும்
இனிய கனவுகளின் எதார்த்தம் ஆகிறது

கவிஞனின் உயர்வு நான்
கவிஞனின் வெளிப்பாடு நான்
இசைஞனின் இயல்பூக்கம் நான்

கருணைத் தாயால் போற்றப்படும்
குழந்தையின் இதயத்திலுள்ள
புனிதக்கோயிலும் நானே

இதயத்தின் கதறலில் தோன்றுவேன்
தேவையை விலக்குவேன்
என் முழுமையான மனதின்
ஆசைகளை நாடும் குரலின்
வெற்றுக் கோரிக்கையை
இப்பாடல் விலக்கிவிடும்

ஏவாள் மூலமாக ஆதாமிடம் தோன்றினேன்
அவள் தலையெழுத்து வெளியேற்றம் கிடைத்தது
ஆம்
நான் சாலமோன்* ராஜாவிடமும்
என்னை வெளிப்படுத்தினேன்
என்னால் அவர் ஞானம் அடைந்தார்

நான் ஹெலனா*வைப் பார்த்து புன்னகைத்தேன்
அவள் தரவாடாவை அழித்தாள்
இருப்பினும்
நான் கிளியோபாட்ரா*வுக்கு முடி சூட்டினேன்
நைல் நதியின் சமவெளியில் அமைதி
மேலோங்கியது

நான் காலத்தைப் போன்றவன்
இன்றைய நாளைக் கட்டி யெழுப்பி
நாளைய பொழுதை அழிக்கிறேன்

படைக்கின்ற மற்றும் அழிக்கின்ற
கடவுளைப் போன்றவன் நான்

வயலட் மலர்களின் பெரும் மூச்சைவிட
இனிமையானவன் நான்
வீசி வரும் சூறாவளியை விட
வன்முறையாளன் நான்

வெறும் அன்பளிப்புகள்
என்னைக் கட்டிப் போடாது
பிரிவு,
என் ஊக்கத்தைக் குறைக்காது
ஏழ்மை என்னைத் துரத்தாது
பொறாமை என் விழிப்பை நிரூபிக்காது
கிறுக்குத்தனம் என் இருப்புக்கு சாட்சியாகாது

தேடுகிறவர்களே,
நான்தான் உண்மை, மன்றாடுகின்ற உண்மை
என்னைத் தேடுவதிலும் பெறுவதிலும்
பாதுகாப்பதிலும் உள்ள
உங்களின் உண்மை தான்
என் நடத்தையை முடிவு செய்கிறது.

---

* *சாலமோன் - பைபிளில் வரும் ஞானமுள்ள ராஜா*
* *ஹெலனா - ரோம் நாட்டு அரசி. காதல் தேவனுக்குக் (வீனஸ்) கட்டப்பட்டிருந்த கோயிலை அழித்தாள். கிறிஸ்தவ மாறி பின்பு புனிதர் ஆனார்.*
* *கிளியோபாட்ரா - கறுப்பழகி, எகிப்து நாட்டின் தாலனி அரச வம்சத்தின் கடைசி ராணி*

6. மனிதனின் பாட்டு

தொடக்க நாளிலிருந்து இன்று வரை
இங்கே இருக்கிறேன்.
உலகின் இறுதிவரை இங்கேயே இருப்பேன்
ஏனென்றால்
எனது துன்பம் சூழ்ந்த பிறவிக்கு
முடிவே கிடையாது.

எல்லையற்ற வானில் சுற்றித் திரிந்தேன்
இலட்சிய உலகில் ஏறிப் பறந்தேன்
ஆகாயப் பரப்பின் ஊடே மிதந்தேன்
ஆனால் இங்கு நான்
தர்க்கத்தில் கட்டுண்டு கைதியாக இருக்கிறேன்

கன்ஃபூசியசி*ன் போதனைகளைக் கேட்டேன்
பிரம்மாவின் ஞானத்தைக் கவனித்தேன்
போதிமரத்தின் கீழே புத்தரின் அருகே
அமர்ந்தேன்
இருப்பினும்
நான் இங்கே
திருச்சபையுடன் மோதியும்
அறியாமையில் மூழ்கியும் இருக்கிறேன்.

யெகோவா* மோசசை* அணுகியபோது
நான் சீனாய் மலை*யில் இருந்தேன்
நாசரேனி*ன் அற்புதங்களை
யோர்தானி*ல் கண்டேன்
முகம்மது வந்தபோது மதீனா*வில் இருந்தேன்
இருந்தும்,
நான் இங்கே குழப்பத்தின் கைதியாக
இருக்கிறேன்.

பின்பு,
நான் பாபிலோனின் பெருமையை நேரில்
கண்டேன்
எகிப்தின் மகிமையைத் தெரிந்துகொண்டேன்
ரோம் நாட்டின் போர்ப்பெருமையைப்
பார்த்தேன்
இருந்தாலும்,
என் தொடக்கக்கால போதனைகள்
இந்த சாதனைகளின்
பலவீனத்தையும் துக்கத்தையும்
எனக்குக் காட்டின.

அமைதியான இந்தியாவில் இருந்து ஞானத்தை
சேகரித்தேன்
அரேபியாவின் பழமையை ஆராய்ந்தேன்.
கேட்கக்கூடிய அனைத்தையும் கேட்டுத்
தெரிந்துகொண்டேன்

இருப்பினும் என் இதயம் குருடாகவும்
செவிடாகவும் உள்ளது.

அதிகாரம் படைத்த
மன்னர்களால் அவதியுற்றேன்
பைத்தியக்காரப் படையெடுப்பாளரால்
அடிமைப்பட்டேன்
கொடுங்கோன்மை திணித்த பசியால்
துன்புற்றேன்
இருந்தும் எனக்கு இன்னும் கொஞ்சம் உள்
ஆற்றல் உண்டு
அதைக்கொண்டு
ஒவ்வொரு நாளையும்
வரவேற்கப் போராடுகிறேன்

என் மனம் நிறைந்துள்ளது
என் இதயம் காலியாக உள்ளது
என் உடலுக்கு வயதாகி விட்டது
என் உள்ளம் குழந்தைக்கு உரியது
என் இளமையின் போது என் இதயம்
வளரலாம்
ஆனால் முதுமைக்காக இறைவனை
இறைஞ்சுகிறேன்
அவனைச் சென்றடையும் தருணத்தை
அவனிடம் வேண்டுகிறேன்
அப்போது தான் என் உள்ளம் நிரம்பும்.

தொடக்க நாளிலிருந்து இன்று வரை
இங்கே இருக்கிறேன்.
உலகின் இறுதிவரை இங்கேயே இருப்பேன்
ஏனென்றால்
எனது துன்பம் சூழ்ந்த பிறவிக்கு
முடிவே கிடையாது.

---

* *கன்ஃபூசியஸ் - சீன நாட்டின் தத்துவ ஞானி*
* *யெகோவா - யூதர்களின் கடவுள்*
* *மோசஸ் - யூதர்களின் தீர்க்கதரிசி, கடவுளிடமிருந்து பத்து கட்டளைகளைப் பெற்றவர்.*
* *சீனாய் மலை - யெகோவா மோசஸுக்கு பத்து கட்டளைகள் வழங்கிய இடம்*
* *யோர்தான் - யோர்தான் நதியில் மோசஸ் இயேசு கிறிஸ்துவிற்கு ஞானஸ்நானம் செய்வித்தார். யோர்தான் நாட்டில் யோர்தான் நதி பாய்கிறது.*
* *நாசரேன் - நாசரேன் ஊரைச்சேர்ந்த இயேசு கிறிஸ்து*
* *மதீனா - இஸ்லாமியரின் புனிதத்தலம்*

7. அதிர்ஷ்டத்தின் பாடல்

நானும் மனிதனும் காதலர்கள்
அவன் எனக்காக ஏங்குவான்
நான் அவனுக்காக ஏங்குவேன்
ஆனால் போட்டிக்காரி ஒருத்தி எங்களுக்கு
இடையில்
துன்பங்களைக் கொண்டுவருவாள்.

அவள் கொடியவள்,
அதிகாரம் செய்வாள்.
அவளிடம் ஒன்றுமே இல்லை
அவள் தான் 'பொருள்'
நாங்கள் போகுமிடமெங்கும்
அவள் தொடர்ந்து வருவாள்.
காவல்காரனைப் போல
என் காதலனின் நிம்மதியைக் கெடுப்பாள்

நான் என் காதலனைத் தேடினேன்
வனத்தில், ஏரியில், மரத்தடியில்
எங்கும் அவனைக் காணவில்லை.
பொருள் என் காதலனைக் கொண்டு சென்றது.

ஆரவாரமான மாநகரத்தின் சிம்மாசனத்தில்
இருத்தியது
அங்குப் பொன்னும் மணியும்
பொங்கி வழிந்தன.

அறிவின் குரலால்
ஞானத்தின் பாடலால்
நான் அவனை அழைத்தேன்
அவனுக்கு என்குரல் கேட்கவில்லை
சுயநலத்தின் இருட்டறைக்குள்
பொருள் அவனைக் கட்டிப்போட்டது
அங்குப் பேராசை குடியிருக்கிறது

மனநிறைவின் வயலில் அவனைத் தேடினேன்
அங்கு நான் தனியாளாகவே நின்றேன்
அவனை என் போட்டியாள்
பேராசை, பெருந்தீனிக் குகையில்
பொன் விலங்குகளால் வலிக்க வலிக்க பூட்டிப்
போட்டாள்.

இயற்கை சிரிக்கும் அதிகாலையில்
அழைப்பேன்
அவனுக்குக் காது கேட்காது
மிகை, அவனது போதை விழிகளை
சோர்விலும் உறக்கத்திலும் ஆழ்த்திவிடும்.

மலர்களின் உறங்கும் மாலை வேளையில்
அமைதி ஆட்சி செய்யும் அந்திப் பொழுதில்
அவனை நோக்கிக் கூப்பிட்டேன்
அவன் திரும்பிப் பார்க்கவில்லை.
எதிர்காலம் குறித்த அச்சம்
அவன் சிந்தனையை மறைக்கிறது.

அவன் என்னைக் காதலிக்க ஏங்குகிறான்
அவன் நடவடிக்கைகளில் என்னைத்
தேடுகிறான்.
கடவுளின் செய்கைகள் தவிர
வேறெங்கும் என்னைக் கண்டுபிடிக்க இயலாது.
தனது மகிமையின் கோட்டைகளில்
தேடுகிறான்.
அது பிறரின் எலும்புகளின் மீது
அவன் கட்டிய மாபெரும் கோட்டை.
தனது பொன், வெள்ளிக் குவியலிலிருந்து
என்னை ரகசியமாய் அழைக்கிறான்
அன்பின் நீரோடை விளிம்பில்
ஆண்டவன் கட்டிய எளிமையின் இல்லத்துக்கு
வந்தால் மட்டுமே,
என்னை அவன் கண்டுபிடிக்கலாம்.

தன் கருவூலத்தின் முன் நிறுத்தி
என்னை முத்தமிட விரும்புகிறான்
ஆனால்

தூய தென்றலின் செழுமையில் அன்றி
வேறெங்குமே
அவன் உதடுகளால் என் உதடுகளைத்
தொட இயலாது

தன் பெருஞ்செல்வத்தைப் பகிர்ந்து
கொள்ளும்படி
என்னைக் கேட்டுக்கொண்டான்
ஆனால்
கடவுளின் அருளை நான் கைவிட மாட்டேன்
என் அழகான அங்கியைக் கழற்றமாட்டேன்.
என்னைத் தொடர்புகொள்ள
ஏமாற்றுவித்தையைத் தேடுகிறான்

நானோ அவன் இதயத்தைத் தேடுகிறேன்
அவன், சிறிய சிறையறைக்குள், தன்
இதயத்தைப் புண்ணாக்குகிறான்
நான், என் காதலால், அவன் இதயத்தைச்
செழிப்பாக்குகிறேன்.

பொருள், பணம் என்று,
என் காதலன்
கத்திக் கதறக் கற்றிருக்கிறான்
எல்லாப் பொருளுக்காகவும்
ஆத்துமாவின் கண்களில் இருந்து

அன்பின் கண்ணீரையும் கருணையையும்
அவன் சிந்துவதற்கு, நான் கற்பிக்கிறேன்
அந்தக் கண்ணீரின் மூலமாக
மனநிறைவின் நீண்ட பெருமூச்சு விடவும்
நான் கற்றுத் தருகிறேன்.

மனிதன் என் இனிய காதலன்
நான் அவனுக்கு உரியவனாக
ஆசைப்படுகிறோம்.

8. என்னை குற்றம் சாட்டுவோரே என்னை விட்டுவிடுங்கள்

உங்களின் ஆத்மாவை
உங்களின் அன்பானவரோடு
பிணைக்கும் காதலின்
பெயரால் கேட்கிறேன்
என்னை விட்டுவிடுங்களேன்!

தாயன்புடன் ஆவியைப் பிணைத்து
தூய அன்பில்
உங்கள் இதயத்தைப் பிணைக்கும்
காதலின் பெயரால் கேட்கிறேன்
என்னை விட்டுவிடுங்கள்
அழுகின்ற என் இதயத்தோடு
நான் போகட்டும் என
என்னை விட்டுவிடுங்கள்

என் கனவுகளின் மகா சமுத்திரத்தில்
நாளை வரும்வரை
என்னைப் பயணிக்க விடுங்கள்

நாளைப்பொழுது மலர்ந்ததும்
அவன் விருப்பப்பட்டதை
என்னிடம் செய்யட்டும்

உங்களின் தோலுரித்தல் என்பது
அவமானத்தின் கல்லறைக்கு
வெறியுடன் நடந்து போய்
அவளுக்கு இறுகிக் குளிர்ந்து போன
பூமியைக் காட்டுகின்ற நிழல் அல்ல

என்னுள் ஓர் சிறிய இதயம் உண்டு
அவனைச் சிறையிலிருந்து வெளியே வரச்செய்து
என் உள்ளங்கையால் அவன் கையைத் தாங்கி
ஆழமாக ஆராய்ந்து
அவனது ரகசியத்தை வெளிக்கொணர்வேன்.

அவனைக் குறி வைத்து அம்பு எய்தாதீர்
அவன் பறந்து மறையட்டும்
தன்னை அழகாலும் அன்பாலும்
அலங்கரித்தபோது
கடவுள் அவனுக்களித்த
நம்பிக்கையின் பலிபீடத்தில்
அவன் ரகசியத்தின் குருதியை ஊற்றட்டும்.

கதிரவன் உதிக்கிறது
நைட்டிங்கேல் பாடுகிறது
தேவமாமரத்து மலர்கள்
தம் நறுமணத்தைப் பரப்புகின்றன
தவறுகளின் உறக்கத்திலிருந்து
என்னை விடுவிக்க விரும்புகிறேன்
என்னைக் குற்றம் சாட்டுபவரே
இவற்றைச் செய்யவிடாமல்
என்னைத் தடுக்காதீர்

சமவெளியின் பாம்புகளையும்
காட்டின் சிங்கங்களையும் காட்டி
என்னை அச்சுறுத்தாதீர்
இப்பூமியின் அச்சங்கள்
என் ஆத்துமா அறியாதவை
தீமை வரும் முன்பு
அதன் வருகையின் எச்சரிக்கையை
அது ஏற்றுக் கொள்ளாது

என்னைக் குற்றம் சாட்டுபவரே
எனக்கு அறிவுரை சொல்லாதீர்
குழப்பங்கள் என் இதயத்தைத் திறந்து விட்டன
கண்ணீர் என் கண்களைக் கழுவி விட்டது.,
தவறுகள் எனக்கு
இதயங்களின் மொழியைக் கற்பித்தன

விலக்கி வைப்பது பற்றிப் பேசாதீர்
என் மனசாட்சியே என் நீதிபதி
அது என் நியாயத்தை எடுத்துரைக்கும்

நான் நிரபரதியாய் இருந்தால்
அது என்னைப் பாதுகாக்கும்

நான் குற்றவாளியாய் இருந்தால்
அது எனக்கு வாழ்வை மறுக்கும்

அன்பின் ஊர்வலம் நகர்கிறது
அழகு தன் தோரணத்தை அசைக்கிறது
இளமை உவகை முரசை ஒலிக்கிறது

என்னைக் குற்றம் சுமத்துபவரே
நான் மனம் திரும்பும் வேளையில் தொந்தரவு
செய்யாதீர்

நான் நடக்கிறேன்
ரோஜாவாலும் புதினாவாலும்
பாதை செழித்திருக்கிறது
காற்று தூய்மையால் மணக்கிறது
செல்வம், செல்வாக்கு பற்றிய கதைகளை
என்னுடன் தொடர்புபடுத்த வேண்டாம்

இறை மகிமையின்
பெருமையாலும் சிறப்பாலும்
என் ஆத்துமா செழிப்பாக உள்ளது

மக்கள், அரசு, சட்டம் பற்றி
என்னிடம் பேசவேண்டாம்
இந்தப்பூமியில் யாதும் ஊரே
இங்குள்ள யாவரும் கேளிர்
என்னை விட்டுச் சென்று விடுங்கள்
நீங்கள் வாழ்வு தரும் மனம் திரும்புதலை
எடுத்துக் கொண்டு
தேவையற்ற வார்த்தைகளை
என்னிடம் தருகிறீர்கள்.

9. காதல் வாழ்க்கை

1. இளவேனில்காலம்

என் அன்பே வா!
குன்றுகளின் வழியே நடப்போம்
இங்குப் பனித்துளிதான் தண்ணீர்
வாழ்க்கை அதன் உறக்கத்திலிருந்து
விழித்துக் கொண்டது
மலைகளிலும் சமவெளிகளிலும்
சுற்றித் திரிகிறது.

இளவேனில் காலத்தின்
அடிச்சுவடுகளைத் தொடர்வோம்
தொலைவில் உள்ள வயல்களுக்குப் போவோம்
குளிர்ந்த பச்சை வெளிகளுக்கு
மேலே உள்ள
மலை முகடுகளில் ஏறுவோம்

மழைக்காலக் கம்பளத்தை விரித்து
இளவேனிலின் விடியலை
பீச் மற்றும் சிட்ரஸ் மரங்களின் மேல்

வைத்து விட்டது
அம்மரங்கள்
கேதுரு* கிராமச் சடங்குகளில்
மணப்பெண்கள் போல் தோன்றுகின்றன

திராட்சைக் கொடிகள் ஒன்றை ஒன்று
காதலர் போலத் தழுவிக் கொள்கின்றன
பாறைகளின் இடையே
ஓடைகள்
ஆனந்தப் பாடல்களைத்
திரும்பத் திரும்பப் பாடி ஆடுகின்றன.
கடலின் செழித்த இதயத்திலிருந்து வரும்
நுரை போல
இயற்கையின் இதயத்திலிருந்து
பூ மொட்டுகள் அரும்புகின்றன

அன்பே! ஆருயிரே! அருகில் வா!
லில்லி கோப்பைகளிலிருந்து
மழைக்காலத்தில் இறுதிக் கண்ணீரைக் குடித்து
நம் ஆவியை சாந்தப் படுத்துவோம்.
பறவைகளின் குரலோசைச் சாரலோடு
இளமென் தென்றலோடு
ஆனந்தக் களிப்பில் உலாவுவோம்

வயலட் மலர்கள் ஒளிந்திருக்கும்
பாறையின் அருகில் அமர்வோம்

அவைகளின் இனிய முத்தப் பரிமாற்றத்தைத்
தொடர்வோம்

2. கோடைக் காலம்

அன்பே, வயல்களுக்குள் போவோம்
அறுவடைக் காலம் நெருங்குகிறது
கதிரவனின் கண்கள்
கதிரைக் கனிய வைக்கின்றன

இதயங்களின் ஆழத்தில் விதைக்கப்பட்ட
அன்பின் விதைகளிலிருந்து
கனிந்த இன்பக் கதிர்களை
பரிசுத்த ஆவி ஊக்குவிப்பதைப் போல
நாமும் பூமியின் விளைச்சலை ஊக்குவிப்போம்

வாழ்க்கை தன் முடிவற்ற நிறைவால்
நம் இதய சாம்ராஜ்யங்களை
அபரிமிதமாக நிரப்புவதைப் போல
நாமும் இயற்கையின் விளைச்சலால்
நம் தொட்டிகளை நிரப்புவோம்

நாம் மலர்களால் படுக்கை அமைப்போம்
வானத்தைப் போர்வை ஆக்குவோம்
வைக்கோலைத் தலையணையாக்கித் துயில்வோம்
ஒரு நாள் பாடுகள் முடிந்ததும்
ஓய்வெடுத்த படி

நீரோடையில் தூண்டும் முணு முணுப்பை
உற்றுக்கேட்போம்.

3. இலையுதிர்காலம்

ஆவியானவர்
காலங்களின் ஞானத்தை
அழியாத பாத்திரங்களில் வைத்ததைப் போல
நாமும் போய் திராட்சைத் தோட்டத்திலிருந்து
கனிகளைச் சேகரித்துப்
பழரசத்தைப்
பழைய பாத்திரங்களில் புளிக்க வைப்போம்.

கோடைகாலத்துக்கு இரங்கற்பா இசைக்கின்ற
உதிர்ந்த மலர்களை மூடிக் கிடப்பதற்காக
பழுத்த மஞ்சள் இலைகளை
காற்று உதிர்ப்பதால்
நாம் நம் இருப்பிடம் திரும்புவோம்.

என்றும் வாழும் இனிய இதயமே
வா வீடு திரும்புவோம்.
தனிமையின் விஷக் கொடுக்குகளுக்குப் பயந்து
பரந்துகிடக்கும் குளிர்ந்த பசுமை நிலங்களை விட்டு
பறவைகள் கதகதப்பு தேடிப்
புனிதப் பயணம் தொடங்கிவிட்டன.

மல்லிகைக்கும் காந்தமாலதி மலருக்கும்
இனி சோகம் இல்லை
வா! வீடு திரும்புவோம்
ஓய்ந்து போன நீரோடை
தன் பாடலை நிறுத்திவிட்டது.
குமிழியிடும் நீரூற்றுகளின்
தாராளக் கண்ணீர் வடிந்துவிட்டது.
எச்சரிக்கை மிகுந்த பழைய மலைகள்
தமது பல வண்ணப் போர்வையைப்
பத்திரப்படுத்திக் கொண்டன.

வா கண்ணே! என் அன்பே!
இயற்கை சோர்வடைந்து
அமைதியான நிறைவான மெல்லிசையால்
தன் உற்சாகத்துக்கு விடையளித்து விட்டது

4. மழைக்காலம்

என் முழு வாழ்க்கையின் இனிய துணையே!
என் அருகே நெருங்கி வா!
நம் இருவருக்கும் இடையில்
மழைக்காலத்தின் ஸ்பரிசம் புக வேண்டும்
மழைக்காலத்தின் ஒரே பலன்
நெருப்பு மட்டுமே.
கணப்புக்கு முன்னால்
என் அருகில் அமர்ந்து கொள்.

உன் இதயத்தின் மகிமையை
என்னிடம் பேசு
அதுவே கதவுக்கு வெளியில் கேட்கும்
இரைச்சலை விட
உயர்வானது; பெருமையானது
நுழை வாயிலை மூடிக் கதவைச் சாத்து
வானத்தின் சீறும் முகத் தோற்றம்
என் ஆவியை அழுத்துகிறது
பனி மூடிய வயல்களின் முகங்கள்
என் ஆத்துமாவை அழ வைக்கின்றன.

விளக்குக்கு எண்ணெய் ஊற்று
அது அணையாமல் இருக்கட்டும்
அதே உன் அருகில் வை
அப்போது தான்
என்னோடு இணைந்த உன் வாழ்க்கை
உன் முகத்தில் எழுதியிருப்பதை
நான் கண்ணீரோடு வாசிக்க முடியும்.

இலையுதிர் காலத்தின்
மதுரசத்தைக் கொண்டு வா
நாம் இளவேனிலின் விதைப்பையும்
கோடையின் பயிர்ப் பராமரிப்பையும்
இலையுதிர் காலத்தின் அறுவடைப் பரிசையும்
பாடி குடித்து மகிழ்வோம்.

என் அருகில் வா! என் ஆத்ம நேசமே!
நெருப்பு தணிகிறது,
சாம்பலுக்குக் கீழே ஓடி ஒளிகிறது.
விளக்கொளி மங்குகிறது
நாம் தயாரித்த மது
நம் கண்களைச் சொக்குகிறது.
கண்கள் மூடிக் கொள்வதற்குள்
நாம் ஒருவரை ஒருவர் பார்த்து ரசிப்போம்.

உன் கைகளுக்குள் வைத்து
என்னை இறுகத் தழுவிக்கொள்
பிறகு
உறக்கம் நம் ஆத்மாக்களைத் தழுவட்டும்
என் அன்பே, என்னை முத்தமிடு
பனிமழைக் காலம்
எல்லாவற்றையும் திருடிக்கொண்டது
நமது அசையும் உதடுகளைத் தவிர

என்றென்றும் நீ என் அருகிலேயே இருக்கிறாய்
உறக்கக் கடலின்
ஆழமும் அகலமும் தான் என்னே!
விடியல் நமக்கு எவ்வளவு அருகில் உள்ளது!

---

* கேதுரு – *கேதுரு மரத்தைக்கொண்டு சாலமோன் ராஜா தேவாலயத்தைக் கட்டினார். கேதுரு வாசனையான மரம்.*

10. வாழ்க்கையின் ஆடுகளம்

அழகையும் அன்பையும் தேட
ஒருமணி நேரம் செலவழிப்பது
அச்சுறுத்தப்பட்ட எளியவன் வலியவனுக்கு
அளித்த, பெருமைக்குரிய
ஒரு நூற்றாண்டு மகிமைக்கு நிகராகும்.

அந்த ஒரு மணி நேரத்திலிருந்து
மனிதனின் உண்மை வரத்தொடங்குகிறது
அப்போது அந்த நூற்றாண்டில்
கலவரமான கனவுகளின்
ஓய்வற்ற கரங்களுக்கு இடையே
உண்மை துயில் கொள்கிறது.

அந்த ஒருமணி நேரத்தில்
ஆத்துமா தன்னை நோக்கிப் பார்க்கிறது.
அது மனிதனின் சட்டங்களில்
தன்னைச் சிறைப்படுத்திக் கொள்கிறது
ஒடுக்குதல் என்ற சிறைக்கம்பிக்குள்
அடைபடுகிறது.

அந்த ஒருமணி நேரமே
சாலமோன் கீதங்களின் உத்வேகம்
அந்த நூற்றாண்டு தான்
பாஹால் கோயிலை* அழித்ததற்கான
குருட்டு ஆற்றல்
அந்த ஒருமணி நேரமே
மலைப் பிரசங்கம் உதித்த நேரம்
அந்த நூற்றாண்டே
பாபிலோனின் கோபுரத்தையும்
பல்மேராவின் அரண்மனைகளையும்
சிதைத்தது

அந்த ஒரு மணி நேரமே
முகமது நபி*யின் ஹிஜிரா ஆயிற்று
அந்த நூற்றாண்டு
அல்லா, கொல்கொதா, சீனாய் மலையை
மறந்து போனது

எளியவரின் சமத்துவத்தைத் திருடியதற்காக
அழுது புலம்புவதற்கு
ஒதுக்கப்பட்ட அந்த ஒரு மணி நேரம்
பேராசை மற்றும் பதவி பறிப்புகளால்
நிரம்பிய நூற்றாண்டை விட
உன்னதமானது.

அந்த மணிநேரத்தில்
இதயம் சோகத்தின் சுடரால்
தூய்மையடைகிறது
அன்பின் தீபத்தால் ஒளிபெறுகிறது
அந்த நூற்றாண்டில்
சத்தியத்தின் மீதான ஆசைகள்
பூமியின் நெஞ்சுக்குள் புதைக்கப்படுகின்றன

அந்த மணிநேரம்
செழித்து வளர வேண்டிய ஆணிவேர் ஆகும்
அந்த மணிநேரம்
தியானத்துக்கான ஒரு மணிநேரமே
இறை வேண்டலுக்கான ஒரு மணிநேரம்
நன்மைக்கான யுகத்திற்குரிய ஒரு மணிநேரம்

அந்த நூற்றாண்டே
உலக நடப்புகளிலிருந்து மட்டுமே
எடுக்கப்பட்ட
சுய முதலீட்டை
செலவழித்த நீரோவின் வாழ்க்கை

இது தான் வாழ்க்கை
காலங் காலமாக மேடைகளில்
சித்திரிக்கப்பட்டது
பல நூற்றாண்டுகளாக

பூமியில் பதிவானது
ஆண்டுக்கணக்கில்
அயன்மையுடன் வாழ்ந்தது
நாட்கணக்கில்
தெய்வ கீதமாக பாடப்பட்டது
ஒரு மணிநேரத்தில்
உயரத்தைத் தொட்டது

அந்த
ஒரு மணிநேரமே
அழிவற்ற தன்மையினால்
ஆபரணமாகப்
பாதுகாக்கப்பட்டது.

---

* முகமது நபிகள்-இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்தவர்
* பாகால் கோயில் - தங்கக் கன்றுக்குட்டி சிலையை வைத்து இஸ்ரவேலர்கள் உருவ வழிபாடு செய்த கோயில்

11. கவிஞன்

அவன்
இவ்வுலகத்துக்கும் இனிவரும் உலகத்துக்கும்
இடையிலான இணைப்பு
தாகமுற்ற ஆத்துமாக்கள் தண்ணீர் அருந்தும்
தூய நீரூற்று

அவன்,
அழகு நதியால் நீர்விடப்பட்ட
பசித்த இதயம் ஏங்குகின்ற
பழங்களைத் தருகின்ற ஒரு மரம்

அவன்
ஒடுக்கப்பட்டோருக்குத்
தன் இனிய மெல்லிசையால்
இதம் தரும் இராக்குருவி

அவன்
வானத்தின் முகத்தை நிரப்பும் வரை
வளர்ந்து மேலேறி
தொடு வானத்தின் மீது தோன்றும்
வெண்மேகம்

பின்பு அம்மேகம் வாழ்வின் வயல்களில் உள்ள
பூக்களின் மீது விழுந்து
ஒளியை உள்ளே அனுமதிக்க
பூவிதழ்களைத் திறக்கும்

அவன்
தெய்வத்தின் நற்செய்தியைப் பரப்ப
தேவதையால் அனுப்பப்பட்ட தேவதூதன்

அவன்
இருட்டால் வெல்லப்படாத
காற்றால் அணைக்கப்படாத
அறிவுத் தீபம்

அத்தீபம்
காதல் தேவதை இஷ்டார் எண்ணெய் நிரப்ப
இசைக்கடவுள் அப்போலோவால் ஏற்றப்பட்டது

அவன் - அக் கவிஞன்
எளிமையாலும் அன்பாலும்
உடுத்தப்பட்ட தனி உருவம்

அவன்
தனக்கான உந்துதலை பெற
இயற்கையின் மடி மீது அமர்ந்தான்

ஊக்கம் குறைவதற்காகக் காத்திருந்து
பின் இரவின் அமைதியில் தங்கினான்

அவன்
பாசம் பொங்கும் பச்சை நிலங்களில்
தனது இதயத்தின் விதைகளைத் தூவுவான்
பின்பு மனித நேயம் தான் செழிப்பதற்காக
அறுவடை செய்யும்.

வாழும் போது மக்களால் புறக்கணிக்கப்பட்டு
உலக வாழ்வை நீத்த பிறகு
மோட்சத்தின் கொடி வீட்டுக்குத் திரும்பிய பிறகு
அடையாளம் காணப்பட்ட
கவிஞன் இவனே!

மனிதத்தை மறுத்து
புன்னகையைக் கேட்ட
கவிஞன் இவனே

அழகான வாசகங்களால்
ஊக்கம் உயர்ந்து மேலேறி
ஆகாயத்தை நிரப்பிய
கவிஞன் இவனே
எனினும்
மக்கள் இவன் புகழைப் போற்ற மறுத்தனர்.

மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் வரை
சில சலுகைத் தருணங்களால்
பெருமை பெற்ற சிலரைப்
போற்றுவதைத் தொடர்வது வரை
தங்கள் ஊக்கத்தின் அழகு, அன்பு மற்றும்
சமாதானத்தின் சின்னத்தைக்
காண உதவியவர்களை
எவ்வளவு காலம் தான்
அவர்களால் புறக்கணிக்க முடியும்?
அறியாமையில் தவிப்போரின்
பாதைகளை ஒளியேற்றும்
மெழுகுவர்த்திகள் போல
தன் வாழ்வைத் தியாகம் செய்கின்ற
துன்பத்தால் சூழப்பட்டோரின் வாழ்க்கையை
மறந்துவிட்டு
இறந்தவர்களை எவ்வளவு காலம்
கௌரவிப்பார்கள்?

கவிஞனே!
நீயே இந்த வாழ்க்கையின் வாழ்க்கை
கடினப்பாடுகள் இருந்தாலும்
காலங்காலமாக வெற்றி பெற்றவன் நீ

கவிஞனே!
நீ ஒருநாள்
அவர்களின் இதய சிம்மாசனத்தில்
கோலோச்சுவாய்
எனவே உன் ராஜ்யத்துக்கு முடிவே இல்லை.

கவிஞனே!
உன் முள் முடியைக் கவனித்துப்பார்
வெற்றித் தலைமாலை அதற்குள்
பொதிந்திருக்கும்.

12. என்ஆத்மாவே! என்னிடம் கருணைக்காட்டு

என் ஆத்துமாவே
என் பலவீனத்தைத் தெரிந்து கொண்டும்
ஏன் அழுகிறாய்?
நீ அழும் வரை,
என் தவறை நான் அறியவில்லை
உன் ஆசைகளை, உன் நெறி முறைகளை
உன் கனவுகளை நான் புரிந்து கொள்ள
என்னிடம் மனிதரின் வார்த்தைகளைத் தவிர
வேறொன்றும் கிடையாது

என் ஆத்துமாவே! என்னைப் பார்
என் வாழ்க்கை முழுக்க
உன் உபதேசங்களைக் கேட்டேன்
சிந்த்துப்பார்.
இப்போது எனக்கு எவ்வளவு துன்பம்!
உன் பேச்சைக் கேட்டு
என் வாழ்க்கையைத் தொலைத்து விட்டேன்

என் இதயம்
மகுடத்தின் மீது
மகிமையாய் இருந்தது
ஆனால்
அடிமைத் தனத்தின் நுகத்தடியில்
மாட்டிக் கிடக்கிறது.
என் பொறுமை எனக்குத் துணையாய் இருந்தது
ஆனால் இன்று
எனக்குப் போட்டியாளராக உள்ளது
என் இதயம் என் நம்பிக்கையாய் இருந்தது
ஆனால் இன்று
என் அலட்சியத்தை நிந்திக்கிறது
ஏன் எல்லாவற்றிலும் நீ அதிகாரம்
செலுத்துகிறாய்

நீ காட்டிய வழியில் நடந்து
நான் எல்லாம் சுகங்களையும் நிராகரித்து
விட்டேன்
வாழ்வின் இன்பங்களே விட்டுவிட்டேன்
என்னிடம் நியாயமாக நடந்து கொள்
அல்லது என்னை விடுவிக்க
மரணத்தை அழைத்து வா
உன் மகிமை நியாயம் பெறட்டும்.

என் ஆத்துமாவே! என்னிடம் இரக்கம் காட்டு
என் மீது அன்பை சுமத்துகிறாய்

என்னால் சுமக்க இயலவில்லை
நீயும் அன்பும் பிரிக்க இயலாத வல்லமை
உலகமும் நானும் பிரிக்க இயலாத பலவீனம்
இது வலியவனுக்கும் எளியவனுக்கும்
இடையிலான போராட்டம்
எப்போதாவது மறையுமா?

என் ஆத்துமாவே என் மீது இரக்கம் காட்டு
என்னால் பெற இயலாத அளவுக்கு
என் அதிர்ஷ்டத்தை எனக்குக் காட்டிவிட்டாய்.
நீயும் அதிர்ஷ்டமும் மலை உச்சியில் வசிக்கிறீர்
சமவெளியின் மடுவில்
நானும் என் துயரமும்
தனித்து விடப் பட்டோம்
மலையும் மடுவும் என்றாவது இணையுமா?

என் அத்துமவே! என் மீது இரக்கம் கொள்
நீ எனக்கு அழகைக் காட்டினாய்
பிறகு மறைத்துக் கொண்டாய்
நீயும் அழகும் வெளிச்சத்தில் இருக்கிறீர்கள்
நானும் அறியாமையும் இருட்டில்
கட்டப்பட்டுக் கிடக்கிறோம்
எப்போதாவது வெளிச்சம் இருட்டின் மீது
போர் தொடுக்குமா?

உன் மகிழ்ச்சி முடிவுடன் சேர்ந்து வருகிறது
உன் ஆனந்தமே இப்போதைய எதிர்பார்ப்பு
ஆனால் இந்த உடம்பு
வாழ்க்கையுடன் போராடுகிறது
வாழும் போது,
என் ஆத்துமா, குழம்பிப் தவிக்கிறது

நீ முடிவற்ற நிலைக்கு விரைகிராய்
ஆனால் இந்த உடம்போ
அழிவை நோக்கி மெல்ல நடை போடுகிறது
அதற்காக நீ காத்திருக்கவில்லை
என் ஆத்மாவே இதுதான் என் பாடு.
எனவே என் உடம்பால்
விரைவாகப் போக இயலாது

நீ மோட்சத்தினால் ஈர்க்கப்பட்டு
மேலே மேலே போகிறாய்
ஆனால் என் உடம்போ
பூமியின் ஈர்ப்பு விசையால்
கீழ் நோக்கி இறங்குகின்றது
நீ அதனை ஆறுதல் படுத்துவதில்லை
என் உடம்பும் என்னைப் பாராட்டுவதில்லை
என் ஆத்துமாவே,
இது தான் என் பெருந்துன்பம்

இரவின் அமைதியில்,
நீ உன் காதலனைச் சந்தித்து
அவனது இருப்பின் இனிமையை ருசிகிறாய்
இந்த உடம்பு எப்போதும்
நம்பிக்கை மற்றும் பிரிவின்
கசப்பான அனுபவத்தில்
பாதிக்கப்பட்டுள்ளது
இது தான் என் ஆத்துமாவே
என்னைத் துன்புறுத்தும் சித்திரவதை
என் ஆத்துமாவே! என் மீது கருணை காட்டு

13. ஒரு காதலின் அழைப்பு

எங்கே இருக்கிறாய் என் கண்ணே
தாயின் மார்பை நோக்கி இருக்கும்
குழந்தையைப் போல
உன்னை நோக்கும் மலர்களுக்கு நீ
சொர்க்கத்தில் இருந்தபடி
நீர் வார்க்கிறாயா?

அல்லது
நீ மதித்துப் போற்றும்
தர்மதேவன் கோயிலில்
உன் சன்னதியில் இருக்கிறாயா?
அங்கு என் இதயத்தையும் ஆத்துமாவையும்
பலியாகத் தருகிறயா?

அல்லது
மோட்ச ஞானம் நிரம்பிய நீ
புத்தகங்களின் நடுவில் இருந்து
உலக அறிவைத் தேடுகின்றாயா?

என் ஆத்தும சகியே! எங்கிருக்கிறாய்?
கோயிலில் வழிபடுகிறாயா?
அல்லது
உன் கனவுகளின் புகலிடமான வயல்வெளியில்
இயற்கையை அழைக்கின்றாயா?
ஏழைகளின் குடிசைகளில் இருந்தபடி
அவர்களின் உடைந்த இதயங்களுக்கு
உன் ஆத்துமாவின் இனிமையால்
ஆறுதலளித்து
அவர்களின் கரங்களில்
உன் வளமையை நிரப்புகிறாயா?
எங்கும் நிறைந்திருக்கும்
இறைவனின் திருவுளம் நீ!
காலத்தை விட வலிமையானவள் நீ!

நாம் சந்தித்த நாள் நினைவிருக்கிறதா?
அன்று
உன்னுடைய ஆவியின் ஒளிவட்டம்
நம்மைச் சூழ்ந்திருந்தது
ஆத்துமாவின் காரியங்களைப்
புகழ்ந்து பாடியபடி
காதலின் தேவதைகள் மிதந்து திரிந்தன

இதயத்தின் தெய்வீக ரகசியத்தைக்
காயம் படாமல் காக்கும்

மார்புக் கூடு போல
மனிதத்திடமிருந்து நம்மைக் காப்பாற்றி
நிழல் தந்த மரக்கிளைகளின் கீழ்
நாம் அமர்ந்திருந்ததை
நினைத்துப் பார்த்தது உண்டா?

நமக்குள் நாமே ஒளிந்து கொள்வது போல
நம் தலைகளை ஒருவர் மீது ஒருவர் சாய்த்து
கரங்களைக் கோர்த்து
காடுகளிலும் வழித்தடங்களிலும்
நாம் நடந்தது நினைவிருக்கிறதா?

நான் உன்னை வழி அனுப்பிய நேரத்தையும்
திரும்ப நினைத்துப் பார்த்தாயா?
என் இதழ்களின் மீது
நீ அளித்த ஞான முத்தத்தையும்
காதலால் இணைந்த இதழ்கள்
வார்த்தைகளை வழங்க இயலாத
மோட்ச ரகசியங்களை
நமக்குப் புலப்படுத்தும் என்பதை
அந்த முத்தம்
எனக்குக் கற்றுக் கொடுத்தது.

மனிதனைப் படைத்த இறைவனின்
மூச்சுக்காற்று போல
ஓர் உன்னதமான பெருமூச்சை

அந்த முத்தம் எனக்கு அறிமுகம் செய்தது.
அந்தப் பெருமூச்சு
என் ஆத்துமாவின் மகிமையை அறிவித்து
ஆன்மீக உலகுக்கு
என்னை இட்டுச் சென்றது.
நாம் சந்திக்கும் வரை
அது அங்கேயே நீடித்திருக்கும்

கண்களில் கண்ணீர் வழிய
எனக்கு நீ முத்தம் கொடுத்த போது
எனக்கு நீ முத்தம் கொடுத்த போது
நீ சொன்ன ஒரு வாசகம்
எனக்கு நினைவிருக்கிறது

"உலக நோக்கத்துக்காக
உலகப் பொருட்கள் பிரிந்து விடும்
உலகத் தேவைக்காக
அவை பிரிந்து வாழ வேண்டும்
ஆனால்
மரணம் வந்து இணைந்து
இரு ஆத்மாக்களை
இறைவனடி கொண்டு சேர்க்கும் வரை
காதலின் கரங்களில்
நம் ஆவிகள் இணைந்து
பாதுகாப்பாக இருக்கும்"

"செல்க என் அன்பே
காதல் உன்னைத்
தன் விருந்தாளியாகத்
தெரிவு செய்துள்ளது
அதற்குக் கீழ்ப்படிந்து நட
காதல் மட்டுமே
தன்னைப் பின்பற்றுவோருக்கு
வாழ்வின் இனிமையை ருசியை
வழங்கும் அழகி.

என் வெற்றுக் கரங்களில்
உன் காதல்
அன்பான துணையாக இருக்கும்
உன் நினைவு,
நிலையான திருமணமாகத் திகழும்

என் மறுபாதியே!
நீ எங்கே இருக்கிறாய்?
இரவின் அமைதியில் விழித்திருக்கிறாயா?

தூய தென்றல்
என் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பையும்
என் அன்பையும்
உனக்குத் தெரிவிக்கட்டும்.

உன் நினைவுகளில்
என் முகத்தைத் தடவி கொஞ்சுகிறாயா?
நீ கொஞ்சும் அந்த உருவம்
இன்னும் என்னுடையதல்ல.
இறந்த காலத்தில் இருந்த
என் மகிழ்ச்சியான
முகத் தோற்றதின் மீது
துன்பம் தன் நிழலை உதிர்த்துவிட்டது.

என் விசும்பல்
உன் அழகைப் பிரதிபலித்த
என் கண்களை உதிர்த்துவிட்டது.
முத்தங்களால் இனித்திருந்த
என் உதடுகளை உலர்த்திவிட்டது

எங்கே இருக்கிறாய் என் அன்பே!
சமுத்திரத்திக்குப் பின்னால் இருந்து
என் அழுகை உனக்குக் கேட்கிறதா?
என் தேவை உனக்குப் புரிகிறதா?
என் பொறுமையின் பெருமை
உனக்குத் தெரிகிறதா?
இறந்து கொண்டிருக்கும்
இந்த இளைஞனின் சுவாசத்தை
உனக்குத் தெரிவிக்கும்
ஆவி எதுவும் காற்றில் இருக்கிறதா?

என் முறையீட்டை
உன்னிடம் கொண்டுவர
தேவதைகளுக்கு இடையே
ஏதேனும் இரகசியத் தொடர்பு உள்ளதா?
வாழ்வின் இருண்மை
என் மார்பில் பதிந்து விட்டது
துன்பம் என்னை ஆட்கொண்டு விட்டது
காற்றில் உன் புன்னகையை அனுப்பு
அது என்னை வந்தடைந்து
என்னை வாழவைக்கும்
காற்றில் உன் வாசனையை சுவாசித்து விடு
அது என்னிடம் வந்து தங்கிவிடும்.

எங்கே இருக்கிறாய் என் அன்பே!
காதல் எவ்வளவு உயர்வானது
நான் எவ்வளவு சிறியவன்

14. இறப்பின் எழில்

நான் துயில்கிறேன்
என் ஆத்துமா காதலால் வெறியூட்டபட்டது
நான் ஓய்வெடுக்கிறேன்
என் ஆவி ஏராளமான இரவு பகல்களைக்
கண்டுவிட்டது
என் கிடப்பின் அருகே
மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்
ஊதுபத்தி புகையுங்கள்
என் உடலின் மீது
மல்லிகையும் ரோஜாவும் தூவுங்கள்
என் தலைமயிருக்கு சாம்பிராணிப் புகைகாட்டி
என் பாதங்களில் வாசனைத் திரவியம்
தெளியுங்கள்
சாவின் கரம்
என் நெற்றியில் எழுதியதை வாசியுங்கள்.

உறக்கத்தின் கைகளில் ஓய்வு பெறுகிறேன்
என் திறந்த கண்கள் களைத்துவிட்டன
வெள்ளிக் கம்பி கட்டிய இனிய யாழ்
என் ஆவிக்கு அமைதி தரட்டும்

உதிரும் என் இதயத்தைச் சுற்றி
வீணை மற்றும் புல்லாங்குழலால்
திரைச்சீலை நெய்யுங்கள்
என் கண்களில்
நம்பிக்கையின் விடியலைப் பார்த்தால்
இறந்தகாலம் பற்றி
இன்னிசை கீதம் பாடுங்கள்
அதன் மந்திரப் பொருண்மை யாதெனில்,
அப்போதுதான்
என் இதயம் ஓய்வு கொள்ளும்,
அதுவே மென்மையான படுக்கை.

என் நண்பர்களே
உங்கள் கண்ணீரை உலரவிடுங்கள்
மலர்கள் விடியலை வரவேற்பது போல
உங்கள் தலைகளை உயர்த்துங்கள்
என் படுக்கைக்கும்
எல்லையற்ற தன்மைக்கும் இடையில்
சாவு என்னும் மணமகள்
ஒளி வரிசையைப் போல் நிற்பதைப் பாருங்கள்
உங்கள் மூச்சடக்கி, மௌனமாக,
அவளுடைய வெண்சிறகின் அசைவொலியை
என்னுடன் இணைந்து கேட்டுப் பாருங்கள்

அருகில் வந்து எனக்கு விடைகொடுங்கள்
என் விழிகளை

உங்களின் இளநகை உதடுகளால் தொடுங்கள்
குழந்தைகள் தம் மென்மையான
இளஞ்சிவப்பு விரல்களால்
என் கைகளைப் பற்றிக் கொள்ளட்டும்
வயதானோர் நரம்புப் புடைத்த கரங்களை
என் தலைமீது வைத்து ஆசிர்வதிக்கட்டும்
கன்னியர் என் அருகில் வந்து
கடவுளின் நிழலை
என் கண்களில் காணட்டும்
அவர் சித்தத்தின் எதிரொலி
என் மூச்சுக் காற்றுடன் போட்டியிடுவதைக்
கேட்கட்டும்.

II. மேலேறுதல்

நான் மலை உச்சியைக் கடந்துவிட்டேன்
முழுமையான
கட்டற்ற விடுதலைக்கான என் ஆத்துமா
வானத்துக்கு மேலே போகிறது.
என் ஆட்களை விட்டு,
தொலை தூரத்துக்குப் போய்விட்டேன்
மேகங்கள் மலைகளை
என் கண்ணிலிருந்து மறைக்கின்றன
சமவெளிகள்
அமைதிப் பெருங்கடல் ஆக்குகின்றன.
வீடுகளையும் சாலைகளையும்
உணர்வின்மையின் கரங்கள் விழுங்குகின்றன

பசுமை நிலங்களும் வயல்களும்
வெண்மையான ஆவியின் பின் மறைகின்றன
அது இளவேனிற்காலத்து மேகத்தைப் போல்
தோன்றுகிறது
மெழுகுவர்த்தியின் மஞ்சள்நிற ஒளியைப் போல
மயங்கும் மாலைப்பொழுதின்
சிவப்பு நிறத்தைப் போல

அலைகளின் பாட்டுகளும்
ஓடைகளின் தெய்வ கீதங்களும்
சிதறுகின்றன

மக்கள் திரளின் ஓசை
மௌனமாக சுருங்குகிறது
நித்தியத்தின் மெல்லிசையைத் தவிர
வேறெதுவும் எனக்குக் கேட்கவில்லை
ஆவியின் ஆசைகளோடு
சரியான ஒத்திசைவில்
முழு வெண்மையில்
போர்த்தப்பட்டுள்ளேன்
வசதியாக இருக்கின்றேன்
அமைதியாக இருக்கின்றேன்

III மிச்சம்

வெள்ளைத் துணிக் கட்டிலிருந்து
என்னை விடுவித்து

மல்லிகை மற்றும் லில்லி இலைகளால் மூடுங்கள்
தங்கப் பெட்டியிலிருந்து என் உடலை எடுங்கள்
அது ஆரஞ்சுப் பூக்களின் தலையணையில்
ஓய்வு எடுக்கட்டும்
எனக்காக அழுது புலம்பாதீர்
இளமையின் இன்பத்தின்
பாடல்களைப் பாடுங்கள்
என் மீது கண்ணீர் சிந்தாதீர்
மதுச்செக்கு மற்றும் அறுவடை பற்றி பாடுங்கள்
துன்பப் பெருமூச்சு விடாதீர்
என் முகத்தின் மீது உங்கள் விரல்களால்
அன்பின் இன்பத்தின் அடையாளமிடுங்கள்

காற்றின் அமைதியை
இரங்கற்பாக்களால்
தொல்லை செய்யாதீர்
உங்கள் இதயங்கள்
என்னோடு இணைந்து
நித்திய ஜீவியத்தின் பாடலை
இசைக்கட்டும்
கறுப்பு உடை அணிந்து
துக்கம் கொண்டாடாதீர்
வண்ண உடை அணிந்து
என்னோடு களிப்படையுங்கள்
இதயப் பெருமூச்சுடன்
என் இறப்பைப் பேசவேண்டாம்

கண்களை மூடுங்கள்,
உங்களுக்குள் என்னை
எப்போதும் பார்க்கலாம்.

இலைக் குவியலில் என்னைக் கிடத்தி
உங்களின் தோழமை தோள்களில்
சுமந்து செல்வீர்
ஆளரவமற்ற காட்டுக்குள்
மெதுவாக நடப்பீர்
என்னைக் கூட்டமான இடுக்காட்டுக்கு
எடுத்து செல்லாதீர்
அங்கு மண்டையோடும்
எலும்புகளின் இரைச்சலும்
என் உறக்கத்தை கெடுத்துவிடும்.

சைப்ரஸ் மரங்கள் நிறைந்த காட்டுக்குள்
என்னை எடுத்துச் செவ்வீர்
மற்றவற்றின் நிழலில் வளராத
வயலட், பாப்பிச் செடிகளுக்கு அருகே
எனக்குக் குழி தோண்டுங்கள்
என் புதைகுழி ஆழமானதாக இருக்கட்டும்
வெள்ளம் வந்தால் என் எலும்புகளை
திறந்த சமவெளிக்கு
இழுத்துச் செல்லக் கூடாது
அதனால்,
என் புதைகுழி அகலமாக இருக்கட்டும்

அந்திப் பொழுதின் நிழல்கள்
என் அருகில் வந்து அமரட்டும்

உலகப்பொருட்கள் அனைத்தையும்
என்னிடம் இருந்து அகற்றுங்கள்
பூமித் தாயின் மடியில்
ஆழத்தில் என்னைக் கிடத்துங்கள்
தாயின் மார்பு மீது
என்னைக் கவனமாக
மெதுவாக வையுங்கள்

மென்மையான மண்ணால் என்னை மூடுங்கள்
ஒவ்வொரு கைப்பிடியிலும்
மல்லிகை, லில்லி, தேவ மாமரத்துப்பூக்கள்,
விதைகள் கலந்திருக்கட்டும்
அவை என் மீது வளரும் போது
என் உடம்பில் கலந்து
என் இதயத்தின் வாசனையை
வெட்டவெளிக்கு எடுத்துச்செல்லும்

என் சமாதானத்தின் ரகசியத்தை
கதிரவன் காதிலும் ஓதும்;
இளங்காற்றில் பயணித்து
வழிப் போக்கரையும் மகிழ்விக்கும்

என்னை விட்டு விடுங்கள் நண்பர்களே
என்னை விட்டு விட்டு
சத்தமில்லாமல் நடந்து போய்விடுங்கள்
என்னை இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு
நீங்கள் மெல்ல கலைந்து செல்லுங்கள்
நிசான்* காற்றின் அதிர்வில்
ஆப்பிள், பாதாம் மலர்கள் பறப்பது போல
சத்தமில்லாமல் கலைந்து செல்லுங்கள்.

உங்கள் இருப்பிடங்களின் மகிழ்ச்சிக்குத்
திரும்புங்கள்
உங்களிடமும் என்னிடமும்
மரணத்தால் பிரிக்க இயலாததை
அங்கும் கண்டு கொள்வீர்கள்
இந்த இடத்தை விட்டுக் கிளம்புங்கள்
இவ்வுலக வாழ்வின் அர்த்தத்தை விடுத்து
தொலைதூரமான விஷயத்தையே
இங்குக் காண்பீர்கள்
என்னை விட்டு கிளம்பிச் செல்லுங்கள்.

* நிசான் காற்று - நிசான் என்பது ஒரு மாதம் (மார்ச் - ஏப்ரல்) யூதர்களின் ஏழாம் மாதம்.

இந்நூலாசிரியரின் பிற நூல்கள்



முனைவர் செ. இராஜேஸ்வரி

எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1-21. வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 21 நூல்கள்.
22. சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்

ஆங்கிலம்>தமிழ்

23. Indian Women-Changes and Challenges (Co-Author)
24. The Globalisation : An Urban Theology
25. Water Privatisation (for PET, Madurai)
26. Assisted reproductive technologies and its Impact on Women (SIRD, Madurai)
27. Eco Vision and Mission
28. Bachelor's Study Materials for Social Science [IGNOU, Madurai] and others...

தமிழ் >ஆங்கிலம்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள்

29. Shade of the Flowering Tree
30. Songs of Dryness
31. Speaking with You
32. Language of Love
33. A Lady at the little gate
34. Honey Hive
35. Ambrosial Kiss (Editor)
36. Therapist of the Finest Art
37. Following Dusty Feet (in print)

பேரா. முனைவர் ஞானசேகரனின் நூல்கள்

38. Emerging Mallarism
39. Festival of Lord Indra
40. Role of Devendirars in Indian war of Independence (Sundaralingam)
41. Mallariyan Literature
42. Re reading of Pallu literature
43. Frontyard without My Dad (Poem)

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

44. பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)
45. பெண் தெய்வ வழிபாடு
46. தேவேந்திரன்
47. மருதநிலப் பெண் தெய்வங்கள்
48. இருநிலத்தில் திருமுருகன்
49. முன்னோர் வழிபாடு
50. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்
51. யானைக் கடவுள்

கவிதைத் திறனாய்வு நூல்கள்

52. பாடுபொருளும் பாசப்பொருளும்
53. பூ மர நிழலின் களமும் காலமும்
54. "2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு
55. கவிதையில் காதல்

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள்

56. மொழிபெயர்ப்பியல் ஆய்வு
57. கவிதை மொழிபெயர்ப்பு
58. நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)

ஆங்கிலக் கவிதை மொழிபெயர்ப்பு

59. எட்டுத்திக்கும் செல்வீர்
60. அவன் கடவுளுக்கு நிகரானவன்
61. செக்கச் சிவந்த ரோஜா
62. மணலும் நுரையும் - கலீல் ஜிப்ரான்
63. பாடல்கள் 14 - கலீல் ஜிப்ரான்

சிறுகதைத் தொகுதி

64. அமராவதியின் காதல்

₹.200